### சென்னை டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை வழித்தடத்தில்

# புதிய மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் தொடங்கிவைத்தார்




▲ சென்னை டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவையை திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரிலிருந்து காணொலி காட்சி மூலம் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார் பிரதமர் மோடி. உடன் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், தமிழக முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர்.

■ சென்னை

சென்னை டிஎம்எஸ் - வண்ணாரப் பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். தங்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறியதால் சென்னை மக்கள், மெட்ரோ ரயில் அதிகாரிகள், பணியாளர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.

டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையிலான மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி, முதல்வர் கே.பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் திருப்பூரில் இருந்து காணொலி காட்சி மூலம் நேற்று தொடங்கி வைத்தனர். இந்த திறப்பு விழாவை முன்னிட்டு ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம், சென்ட்ரல், உயர் நீதி மன்றம், மண்ணடி மெட்ரோ ரயில் நிலையங்கள் மலர்களாலும், பூக்கோலங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

சென்னை சென்ட்ரலில் நடந்த தொடக்க விழா நிகழ்ச்சியில் மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஹர்தீப்சிங் புரி, அமைச்சர்கள் ஜெயக்குமார், எம்.சி.சம்பத், சரோஜா, அதிமுக எம்பிக்கள், அரசு சிறப்பு திட்டங்களின் செயலாக்க அதிகாரி சோமநாதன், ஜப்பான் தூதரகம் மற்றும் ஜெய்கா பன்னாட்டு நிதி முகமையின் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

**முதல் பயணம்**

இந்த வழித்தடத்தில் முதல் ரயிலை ரீனா என்ற பெண் ஓட்டுநர் இயக்கினார். மெட்ரோ ரயில் சேவை தொடங்கியதும், பொதுமக்கள், மெட்ரோ ரயில் அதிகாரிகள், பணியாளர்கள் உற்சாகமாக குரல் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பரஸ்பரம் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர். வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரையில் மெட்ரோ ரயிலில் நேற்று பயணம் செய்த பொதுமக்கள், தங்களது செல்போன் மூலம் உற்சாகமாக செல்ஃபி எடுத்துக் கொண்டனர்.

சென்னை சென்ட்ரலில் உள்ள சுரங்க மெட்ரோ ரயில் நிலையம் 70 ஆயிரத்து 60 சதுர அடியில், பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. ரூ.400 கோடி செலவில் பல்வேறு வசதிகள் இங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த ரயில் நிலையத்தில், கோயம்பேடு, எழும்பூர் வழியாக வரும் மெட்ரோ ரயில்கள் முதல் தளத்தில் வந்து நிற்கும். வண்ணாரப்பேட்டையில் இருந்து வரும் மெட்ரோ ரயில்கள், 2-வது தளத்துக்கு வந்து அண்ணா சாலை வழியாக விமான நிலையம் செல்கிறது.

சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து பூங்கா நகர், ரிப்பன் மாளிகை, சென்ட்ரல் ரயில் நிலையம், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை மருத்துவ கல்லூரி செல்ல நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## மோடியிடம் முதல்வர் கடிதம்

சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட பணிக்காக ரூ.69 ஆயிரத்து 180 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நிலையில் உள்ளது. 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகளுக்கு மத்திய அரசு விரைந்து அனுமதி வழங்க வேண்டும். இந்த பணிகளுக்கான தொகையில் 50 சதவீதம் மத்திய அரசு வழங்க வலியுறுத்தி பிரதமரிடம் முதல்வர் கடிதம் அளித்தார்.